## தமன பிரதேச சபை
## அம்பாறை மாவட்டம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 மார்ச் 11 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கையும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையும் 2019 மே 31 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தமன பிரதேச சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | ஹிங்குரான வார சந்தையில் கட்டிடத்தின் செலவினமான ரூபா 11,494,037 தொகை மூலதனமாக்கப்படவில்லை. | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | கணக்கீடு செய்யப்படாதிருந்த ரூபா 11,494,037.16 பெறுமதியில் நிர்மாணிக்கப்பட்ட ஹிங்குரான வாராந்த சந்தைக்கு முன்னால் உள்ள 14 கடைகளை உடைய இரண்டு மாடிக்கட்டிடத்தில் இது வரையிலும் பெறுமதி 2019 யூன் மாதம் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. |
| (ii) | மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் கீழ் ஹெலக்கம்புர கூட்டுப் பசளை தளத்தின் களஞ்சிய அறைக்காக ஏற்பட்ட செலவினம் ரூபா 1,279,813 | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். | ஹெலக்கம்புர கூட்டுப் பசளை தளத்தின் களஞ்சிய அறை நிர்மாணிக்கும் செலவினம் தொடர்பான கோவையினை பரீட்சித்து |

| | | |
|---|---|---|
| தொகை ரூபா 1,104,958 ஆக மூலதனமாக்கப்பட்டிருந்தது. | | 2019 யூன் மாதத்தின் போது உரிய தொகையை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**(ஆ) பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2011 ஆம் ஆண்டு முதல் 2017 ஆண்டு வரை முத்திரைக் கட்டணமாக பெறவேண்டிய ரூபா 92,260 தொகையை மீளாய்வாண்டின் போதும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2011 – 2017 ஆம் ஆண்டுகளுக்காக 2018.12.31 ஆம் திகதியில் அறவிட வேண்டிய தொகை ரூபா 92,260 (தரப் பத்திரக் கட்டணம் மற்றும் 1 சதவீத முத்திரைக் கட்டணம் கழித்து) ஆக இருந்தது. இந்த நிலுவைப் பணம் தொடர்பாக கோரிக்கை கடிதம் அனுப்பப்பட்டிருந்ததுடன் 2017 யூலை / ஆகஸ்ட் மாதங்களுக்குரிய ரூபா 33,460 தொகை 2019.04.22 ஆம் திகதி DPS/1503 மூலம் கிடைத்திருந்தது. |
| (ii) | 2016 ஆம் ஆண்டில் இருந்து ஆதன வரியாக அறவிட வேண்டியிருந்த ரூபா 982,479 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2016 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஆதன வரிப் பதிவேடு சரியான பிரகாரம் நாளதுவடயாக்கப்படவில்லை. எனினும் இறுதி கணக்கில் ஆதனவரி நிலுவையாக ரூபா 1,316,920 தொகையான மீதியொன்று காண்பிக்கப்பட்ட போதிலும் அந்த முழுத்தொகை தொடர்பான தகவல்கள் எங்களிடம் காணப்படாமையினால் ஆதன வரி எங்களிடம் காணப்படும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அறவிடப்படுகின்றது. |

**(இ) கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 1,695,443 தொகையான 05 சொத்து விடயங்கள் மற்றும் ரூபா 87,637 தொகையான 01 பொறுப்பு விடயம் என்பவற்றின் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமையினால் திருப்திரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது. | நிதி கூற்றுக்களில் காணப்படுகின்ற கணக்கு மீதிகளை உறுதிப்படுத்துகின்ற சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | காண்பிக்கப்பட்டுள்ள சகல கணக்குகளிலும் உள்ள மீதிகளுக்காக எங்களிடம் உள்ள ஏதாவது பதிவேடுகள் இருக்குமாயின் அதனை பரீட்சித்து பார்ப்பதற்கும் பதிவேட்டை நாளதுவரையாக பேணிச் செல்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.4 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் | | | |
| (i) | 139(1) ஆம் பிரிவு | ஆதன வரி விதிப்பதன் கீழ் ஆதனங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யக்கூடிய வகையில் தவணை அறிக்கை கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது ஆதன வரி பிரதேசங்களின் கீழ் ஆதனங்களுக்காக தவணை அறிக்கை கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ii) | 140(1) ஆம் பிரிவு | பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் சகல அசைவுறாத | பிரதேச சபைகள் அதிகாரச் | சகல ஆதனங்களிலும் புதிய மதிப்பீட்டு நடவடிக்கைகள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆதனங்களும் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | மேற்கொள்ளப்படுகின்றது. |
| (iii) | 159 ஆம் பிரிவு | 2009 முதல் 2018 வரையான காலப்பகுதியில் சபையினால் வாடகைக்கு வழங்கப்பட்ட 27 கடைகளில் இருந்து ரூபா 547,902 தொகையான நிலுவை கடை வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எழுத்து மூலமன்றி வாய்மூலம் அறிவிக்கப்பட்டு இந்த நிலுவைத் தவணையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி<br>---------------------------- | | | |
| | விதி 217 | பிரதேச சபைக்குச் சொந்தமான மற்றும் சபையினால் பயன்படுத்தப்படுகின்ற காணிகளைக் கையேற்று மதிப்பீட்டுப் பெறுமதி நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்படவில்லை. | விதிகளில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | பிரதேச சபையினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்படும் காணி மற்றும் ஆதனங்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பல சந்தர்ப்பங்களில் கோரிக்கை விடப்பட்டிருந்தும் இது தொடர்பாக தமன பிரதேச செயலகத்தினால் அந்த பணிகள் நிறைவேற்றப்படாமையினால் மதிப்பீடு செய்யப்பட்ட மிகுதி நடவடிக்கைகளை செய்ய முடியாதிருந்தது. |

(இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம்

---------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 104(3),(4) | 2018 ஆம் ஆண்டின் போது விபத்துக்கு உட்பட்டிருந்த 02 வாகனங்கள் தொடர்பாக நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த வாகனத்தின் விபத்து தொடர்பாக ஆரம்ப பரிசோதனை மேற்கொள்வதற்காக பிரதான முகாமைத்துவ உதவியாளர், தொழிநுட்ப உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச சபை உறுப்பினர் ஒருவரை உள்ளடக்கி விசாரணை சபை ஒன்று நியமிக்கப்பட்டு உரிய திகதியில் அறிவிக்கப்பட்டு இருந்ததுடன் பல சந்தர்ப்பங்களிலும் உரிய உறுப்பினர் விசாரணை நடவடிக்கைகளுக்காக சமூகமளிக்காமையினால் பரிசோதனையினை அத்திகதியில் மேற்கொள்ள முடியாதிருந்ததுடன் அதன் பின்னர் அது கைவிடப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாதிருக்க நடவடிக்கை எடுக்கப்படுமென மேலும் அறிய தருகின்றோம். |
| (ii) | நிதிப்பிரமாணம் 110 | பிரதேச சபையினால் இழப்பு மற்றும் நட்ட பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | இதுவரையிலும் மற்றும் நட்ட பதிவேடு பேணிச் செல்லப்படுகின்றது. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | 2016 திசெம்பர் 21 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை | 02 வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களுக்கு எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் | எதிர்காலத்தில் எரிபொருள் பரிட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,338,954 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 2,941,878 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2017 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2017 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 420,907 | 420,907 | 583,052 | 15,038,069 | 420,906 | 420,907 | 87,672 | 1,711,451 |
| (ii) | வாடகை | 3,144,754 | 3,072,888 | 2,939,581 | 525,899 | 472,626 | 2,975,376 | 3,038,364 | 403,902 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 900,000 | 1,114,780 | 1,114,780 | 83,750 | 1,222,184 | 1,345,000 | 1,630,654 | 83,750 |
| (iv) | ஏனைய வருமானம் | 3,843,500 | 9,426,655 | 5,868,388 | 958,407 | 3,456,983 | 1,222,500 | 258,091 | 2,200,518 |

#### 2.2.2 வீதவரியும் வரியும்

(அ) ஆதனவரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2007 ஆம் ஆண்டில் ஆதன வரி மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு ஆதன வரி அறவிடப்பட்டிருந்தது. நிலுவை | பதிவேட்டின் பிரகாரம் நிலுவை | நிலுவை ஆதனவரி மீதி ரூபா 1,316,920 தொகை 2018 இன் இறுதிக் |

| | | |
|---|---|---|
| வருமான பதிவேட்டின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த ஆதன வரி ரூபா 1,316,920 ஆக இருந்த போதிலும் நிலுவை மீதியை அறவிடுவதற்கு போதியளவான பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | ஆதனவரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டு ம். | கணக்குகளில் கான்பிக்கப்பட்டிருந்த போதிலும் சபையிடம் உள்ள தகவல்களின் பிரகாரம் நிலுவை அறவிடப்பட்டுள்ளது. |

**(ஆ) ஏக்கர் வரி**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட செலுத்தப்படாத ஏக்கர் வரி ரூபா 230,850 தொகையை அறவிடுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிலுவை ஏக்கர் வரியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2014.12.31 இல் உள்ளவாறான இறுதி நிதிக்கூற்றுக்களில் ரூபா 230,850 மீதியொன்று காண்பிக்கப்பட்டதுடன் இது தொடர்பாக பணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 134 (3) ஆம் பிரிவின் பிரகாரம் காணியின் அளவு 5 ஹெக்டயரை விட குறைவான எனினும் ஹக்டயர் 1 க்கு குறையாத சந்தர்ப்பங்களின் மாத்திரம் வருடாந்த ஏக்கர் வரி அமைச்சரின் அங்கீகாரத்தின் கீழ் ரூபா 50 அறவிடமுடியுமாக இருந்தமை குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது மொத்த அதிகாரப் பிரதேசத்திலும் உள்ள சகல கரும்பு பயிர்ச்செய்கை காணிகளும் 02 ஏக்கர் கூறுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. ஆதனால் ஏக்கர் வரியை அக்காணிகளில் இருந்து அறவிடமுடியாதிருந்தது. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

(அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் 30 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய போதிலும், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உபவிதிகள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | உபவிதி விதிக்கப்படாதிருந்த விடயங்களுக்காக உபவிதிகள் விதிக்கப்பட வேண்டும். | பிரதான விடயங்கள் தொடர்பான உபவிதிகள் அதிகாரப் பிரதேசத்திற்குரிய பிரகாரம் பல சந்தர்ப்பங்களில் தயாரித்து உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும் இது தொடர்பாக மிகுதி நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையினால் 2018 ஆம் ஆண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. | செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**(இ) கைவிடப்பட்ட இலக்குகள்**

| | இலக்குகள் | 2018 திசெம்பர் 31 வரை செலவிடப்பட்ட தொகை | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- | --- | --- |
| | | ரூபா | | | |
| i. | தெயடகிருல 2013 அபிவிருத்தி சுற்றுலா வீடமைப்பு நிர்மாணம் | 1,444,162 | அத்திவாரம் இட்டு தூண்களுக்கு தேவையான கம்பிகள் இடப்பட்ட பின்னர் நிர்மாணம் நிறுத்தப்பட்டிருந்தது | மிகுதி நிர்மாண நடவடிக்கைகளை பூர்த்தி செய்து பாவனைக்கு எடுக்கக்கூடிய நிலைக்கு | தெயடகிருல 2013 அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபா 08 மில்லியன் செலவினத்தில் நிர்மான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. எனினும் முன்னாள் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | கொண்டு வர வேண்டும். | காணப்பட்ட பிரதேச சபை இது தொடர்பாக காண்பிக்கப்பட்ட எதிர்ப்பின் காரணமாக நிர்மாண நடவடிக்கைகளை இடைநடுவில் நிறுத்தி இருந்தது. கிழக்கு மாகாணத்தின் பிரதம செயலாளரின் பங்குபற்றலுடன் 2019 ஆம் ஆண்டின் பாதீட்டின் மூலம் நிதி ஏற்பாடு ஒதுக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |
| ii. | தமன பிரதேச சபையின் கீழ் 2015 சன சமூக மண்டபத்தை நிர்மாணித்தல் | 39,900 | பிரதேச சபை நிதியத்தின் கீழ் 2015 திசெம்பர் 18 ஆம் திகதி நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்பட்ட கட்டிடத்தின் அத்திவாரம் மாத்திரம் அமைக்கப்பட்டிருந்தது. | மிகுதி நிர்மாண நடவடிக்கைகளை பூர்த்தி செய்து பாவனைக்கு எடுக்கக்கூடிய நிலைக்கு கொண்டு வர வேண்டும். | 2015 ஆம் ஆண்டின் போது முன்னால் பிரதம அமைச்சரின் அறிவித்தலின் பிரகாரம் பிரதேச சபையினை வலுப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் பிரதேசத்தில் சனசமூக மண்டபத்தை நிர்மாணித்தல் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதும் அதற்காக நிதி ஏற்பாடு அங்கீகரிக்கப்படாமையினால் பிரதேச சபை நிதியத்தில் இருந்து அத்திவாரம் மாத்திரம் இடப்பட்டு நிர்மாண நடவடிக்கைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டிருந்தன. இது தொடர்பாக எதிர்வரும் செயற்திட்டத்தின் போது நிர்மாணங்களை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபையினால் ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் - 2030 தொடர்பாக அறிந்திருக்கவில்லை. | இது தொடர்பாக அறிவிக்கப்பட வேண்டும். | இது தொடர்பாக அறிவிக்கப்படவில்லை. |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2016 ஆகஸ்ட் மாதத்தின் போது ரூபா 254,292 தொகை செலவில் மீன் மற்றும் இறைச்சி வியாபாரங்களை செய்வதற்கு ஹிங்குரான வாராந்த சந்தை வளவில் கடை நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும் உரிய நிர்மாணங்கள் சரியான திட்டத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படாமையினால் வியாபாரிகளினால் வாராந்த சந்தை வளவில் வேறொரு இடத்தில் மீன் மற்றும் இறைச்சி விற்பனை செயற்பட்டிருந்தது. | இந்த இடத்தை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | மீன் மற்றும் இறைச்சி விற்பனைக்காக வாராந்த சந்தையின் பின்பக்கத்தில் இந்த கடைகள் நிர்மாணிக்கப்பட்ட போதிலும் மீன் மற்றும் இறைச்சி விற்பனை செய்யும் வியாபாரிகளுக்கு அந்த இடத்தில் அந்த பணிகளை நிறைவேற்றுவதற்கு வசதியீனமாக இருந்தது. இதற்காக பொருத்தமான கடைகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. அதன் பின்னர் அந்த இடம் சபையின் ஏனைய வருமானம் உழைக்கும் திட்டத்திற்காக ஈடுபடுத்துவதற்கு கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) சபை அதிகார பிரதேசத்தில் 06 வியாபார நிறுவனங்களில் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 31 அறிவித்தல் பதாதைகளுக்காக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க | முன்னைய ஆண்டில் பெறப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்;டு 2018 ஆம் ஆண்டில் கிடைக்க |

| | | | |
|---|---|---|---|
| | அறவிட வேண்டிய ரூபா 699,900 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வேண்டும். | வேண்டிய நிலையான அறிவித்தல் பதாதைக் கட்டணம் ரூபா 699,900 ஆக இருந்ததுடன் இதுவரையில் ரூபா 560,300 தொகை அறவிடப்பட்டுள்ளது. |
| (இ) | பிரதேச சபைக்கு சொந்தமான நீண்ட காலமாக வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த 27 கடைகளில் இருந்து 2009 முதல் 2018 வரையான காலப்பகுதிக்குரிய அறவிட வேண்டிய ரூபா 483,215 தொகை மற்றும் உடன்படிக்கையின் பிரகாரம் அறவிட வேண்டிய 10 சதவீத தாமதக் கட்டணம் என்பன அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானம் மற்றும் தாமதக் கட்டணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த நிலுவைப் பணம் மற்றும் தண்டப்பணம் தொடர்பாக அவர்களுக்கு எழுத்து மூலம் அறிவித்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | **ஊழியர் வெற்றிடமும் மிகையும்**<br>2018 திசெம்பர் 31 இல் பதவியணியில் 08 பதவிகளில் 10 வெற்றிடங்கள் காணப்பட்டன. | பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | அங்கீகரிக்கப்பட்ட பதவி அணியில் 10 வெற்றிடங்கள் ஏற்பட்டதுடன் இந்த பதவிகளுக்காக ஆட்சேர்ப்பினைச் செய்வதற்கு கிழக்கு மாகாண சபையினால் மேற்கொள்ள வேண்டி இருந்தது. |
| (ஆ) | ஓய்வு பெற்றுச் சென்ற உத்தியோகத்தரிடமிருந்து 2105 ஆம் ஆண்டு முதல் அறவிட வேண்டிய ரூபா 10,000 தொகையான கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்பாது காணப்படுகின்ற ஊழியர் கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 மே மாதம் முதல் ஓய்வூதியத் திணைக்களத்தால் மாதாந்தம் ரூபா 500 வீதம் கழிக்கப்பட்டு எங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. ஆதன் பிரகாரம் இதுவரையிலும் ரூபா 9,000 மீதியொன்று காணப்பட்டது. |

## 3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | குறித்துரைத்த காலம் குறிப்பிடப்படாமல் வாடகையாளர்களுடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட 42 கடைகள் தொடர்பாக உடன்படிக்கையில் காணப்படுகின்ற குறைபாடுகளை சரிசெய்து மீண்டும் உடன்படிக்கை செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | உடன்படிக்கைகளில் காணப்படுகின்ற குறைபாடுகளை தயாரித்து மீண்டும் உடன்படிக்கை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிரதேச சபைக்குச் சொந்தமான கடைகள் 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக வாடகைக்கு வழங்கப்படாதிருந்ததுடன் இந்த கடைகள் வாடகைக்கு வழங்கப்பட்டு புதிய உடன்படிக்கைக்காக கோரப்பட்டிருந்ததுடன் பல்வேறு காரணங்கள் காண்பிக்கப்பட்டு இது வரை வருகை தரவில்லை. எனினும் இந்த ஆதனங்கள் பிரதேச சபைக்கு கையளிப்பதற்கு மிகுதி நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் ஆதனங்களை கையேற்றதன் பின்னர் சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | மேற்கூறப்பட்ட கடைகளில் வாடகை 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்படாதிருந்ததுடன் தற்போது காணப்பட்ட வாடகை மதிப்பீடு செய்யப்பட்ட முறை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | முறையான பிரகாரம் கடைகள் 05 வருடங்களுக்கு ஒரு தடவை மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | இந்த கடைகளுக்கு புதிய மதிப்பீடொன்றுக்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 பராமரித்தல் மற்றும் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 06 வாகனங்கள் நீண்ட காலமாக கட்டிடத்தின் சுற்றாடலில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததுடன் அந்த வாகனங்களை பழுதுபார்ப்பதற்கோ அல்லது விற்றுத் தீர்த்தல் தொடர்பாக சபையினால் கவனம் செலுத்தப்படவில்லை. | வாகனங்களை பழுதுபார்த்தல் அல்லது விற்றுத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த நிறுவனத்தில் பாரியளவான பழுதுபார்த்தலுக்காக வாகனம் அனுப்பப்படாதிருந்ததுடன் அன்றன்றைக்கு இடம்பெறுகின்ற சிறு பழுதுபார்த்தல் தொடர்பாக வாகனச் சம்பவத்திரட்டு புத்தகத்தில் பதியப்பட்டுள்ளது. இது வரையிலும் பாரியளவான பழுதுபார்த்தலுக்காக அனுப்பப்பட்ட LE 7498 ஆம் இலக்க மஹேந்திரா கெப் வண்டிக்காக மாத்திரம் தனிப்பட்ட கோவையொன்று பேணிச்செல்லப்பட்டிருந்தது. |

### 3.5.2 சொத்துக்களில் இருந்து கிடைக்க வேண்டிய வருமானம் பெறப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைக்கு சொந்தமான ஹிங்குரான சந்தைத் தொகுதியில் 02 கடைகள் மற்றும் மூவங்கலயில் 02 கடைகள் என்பன 01 வருடம் முதல் 10 வருடங்கள் அளவிலான கால எல்லை வரை மூடப்பட்டிருந்ததுடன் அறவிட வேண்டிய ரூபா 220,600 தொகையான நிலுவை கடை வாடகையை அறவிடுவதற்கோ அல்லது அந்த கடைகளை மீண்டும் கையேற்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வருமானம் உழைக்கின்ற பணிகளுக்காக ஈடுபடுத்த வேண்டும். | இந்த கடைகளுக்காக நிலுவை வாடகையாக பல தடவைகள் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டதுடன் இது தொடர்பாக எதிர்காலத்தில் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.5.3 கையேற்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பல்வேறு நிறுவனங்கள் மூலம் சபைக்கு வழங்கப்பட்ட 10 வாகனங்களின் உரித்தை சபைக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வாகனங்களின் உரித்தை சபையின் பெயருக்கு கையேற்றல் வேண்டும். | கையேற்கப்படாத 10 வாகனங்கள் காணப்பட்டதுடன் அந்த வாகனங்களில் 03 வாகனங்கள் தற்போது ஓட்ட நிலையில் காணப்படுகின்றது. மிகுதி வாகனங்களை பழுது பார்ப்பதற்காக கணிசமான தொகை ஒன்று செலவாவதுடன் சபையில் காணப்படுகின்ற குறைந்த வருமான நிலைமையுடன் ஒரே தடவையில் இந்த வாகனங்களை பழுதுபார்த்தல் வசதியீனமாக இருந்தமையால் எதிர்காலத்தில் வாகனங்களை பழுதுபார்ப்பதுடன் கையேற்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.5.4 பெறுகை

#### 3.5.4.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2006 மார்ச் 24 ஆம் திகதி விநியோகிக்கப்பட்ட தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் இலக்கம் 128 இன் பிரகாரம் 2018 ஆம் ஆண்டுக்காக வருடாந்த பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்படவில்லை. | பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | 2006 மார்ச் 24 ஆம் திகதிய தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் இலக்கம் 128இன் பிரகாரம் ஆங்கில மொழி மாத்திரம் பிரசுரிக்கப்பட்டமையால் இது தொடர்பாக நடவடிக்கை எடுக்க முடியாதிருந்நது. |